செ.வெ.எண்: 36/ஜூன் நாள்: 16.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## கீழக்கரை வட்டம், வண்ணான்குண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கொப்பரை தேங்காய் கொள்முதல் மையத்தினை

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், வண்ணான்குண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கொப்பரை தேங்காய் கொள்முதல் மையத்தினை இன்று (16.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கீழக்கரை வட்டத்தில் உள்ள வண்ணான்குண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கொப்பரைத் தேங்காய் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் அரசு நேரடியாக கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய ஏதுவாக கொப்பரை கொள்முதல் மையம் துவங்கப்பட்டுள்ளது. இக்கொள்முதல் மையத்தின் மூலம் அரவை கொப்பரை தேங்காய் கிலோ ரூ.59.50 வீதமும் , பந்து கொப்பரை தேங்காய் கிலோ ரூ.62.40 வீதமும் கொள்முதல் செய்ய தமிழக அரசு நிர்ணயித்துள்ளது. எனவே கொப்பரைத் தேங்காய் உற்பத்தியாளர்கள் இடைத்தரகர்களை நம்பி ஏமாறாமல், அரசு நிர்ணயித்த விலையில் அரசு கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையத்தில் வழங்கி இலாபம் பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) திரு.ஆர்.ஹரிவாசன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி. டி.செந்தமிழ்செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வி.எஸ்.வெள்ளைச்சாமி உட்பட அரசு அலுவலர்கள் , விவசாயிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**